## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறும் ஒன்றிய அரசு!

**தொடர்ச்சியான இரயில் விபத்துகள் நடவடிக்கை என்ன?**

**கனிமொழி கருணாநிதி:**



இரயில் தடம் புரண்டு உண்டாகும் விபத்துகள், இரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வதால் ஏற்படும் விபத்துகள், தீ பிடித்தல் மற்றும் லெவல் கிராசிங் விபத்துகள் உட்பட கடந்த பத்தாண்டுகளில் “தொடர்ச்சியான ரயில் விபத்துகள்” ஏற்படுவதன் காரணங்கள் குறித்து ஒன்றிய அரசிடம் ஏதேனும் விவரங்கள் இருக்கின்றனவா என திமுக எம்.பி. கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேபோல் மேற்குறிப்பிட்ட காலத்தில் இரயில் விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, இரயில்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வதால் ஏற்படும் விபத்துகள் மற்றும் இரயில் தடம் புரண்டு உண்டாகும் விபத்துகளின் காரணங்கள் பற்றிய அறிக்கைகளை அரசு உடனடியாக வெளியிட வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

சிக்னலிங் மற்றும் கண்ட்ரோல் அமைப்பை நவீனமாக்குவதில் ஒன்றிய அரசு மெத்தனப்போக்கை கடைபிடித்தது, போதிய அளவு இரயில்வே துறையில் ஆய்வு மேற்கொள்ளாதது மற்றும் முக்கிய பாதுகாப்பு இடங்களில் ஆள் பற்றாக்குறை உள்ளது எனும் காரணங்கள் உண்மையா என்பதையும் அரசு உடனடியாக விளக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**நூறு நாள் வேலை திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச தினக்கூலி உயர்த்தித் தர வேண்டும்.**

**டி.ஆர்.பாலு:**



நூறு நாள் வேலைத்திட்டம் என அறியப்படும் மகாத்மா காந்தி தேதிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் சமீப ஆண்டுகளில் கணிசமாகக் குறைக்கப்படுவதன் காரணம் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. எம்.பி. டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார். அதேபோல் மாநிலங்களுக்குத் தர வேண்டிய நிலுவைத் தொகை உள்ளிட்ட விவரங்கள், பல்வேறு மாநிலங்களுக்கு நிதி குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் அதன் விவரங்கள், மார்ச் 2024 வரை நிலுவையில் உள்ள நிதியை விடுவிப்பதற்கான மாநிலங்களின் கோரிக்கைகளின் விவரங்கள் என்ன என்பதனைத்தும் ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் விளக்கமளிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

**சுகாதாரத் துறையில் பெண்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் வேண்டும்!**

**திருச்சி சிவா:**



சுகாதாரத்துறையில் பெண்களுக்கான அடிப்படை பாதுகாப்பை வலியுறுத்தியிருக்கும் தி.மு.க. எம்.பி. திருச்சி சிவா, தனது அறிக்கையில், சுகாதார நிலையங்களில் போதிய சிசிடிவி கேமிராக்கள் அமைத்தல், அனுபவமுள்ள பாதுகாப்புப் பணியாளர்களை வேலையில் அமர்த்துதல், போதியளவு வெளிச்சம் இருக்குமாறு உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்ற வழிமுறைகளை உடனடியாக செயல்படுத்தி சுகாதாரத்துறை பணியாளர்களுக்கான பாதுகாப்பை ஒன்றிய அரசு உறுதிசெய்ய வேண்டும் என கேட்டுள்ளார்.

**விவசாயத்தில் ட்ரோன்கள் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும்!**

**எஸ்.ஜெகத்ரட்சகன்:**



விவசாயத்தில் அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த ஒன்றிய அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை வெளியிடுமாறு திமுக எம்.பி. எஸ்.ஜெகத்ரட்சகன் மக்களவையில் கேட்டுள்ளார்.

விவசாயத்திற்கான தொழில்நுட்பத்தில் நவீனக் கருவியான ட்ரோன்களை அதிகளவில் பயன்பாட்டில் கொண்டுவருவது பற்றி குறிப்பிட்டு, ட்ரோன்கள் பயன்படுத்துவன்மூலம் தண்ணீர், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, பெருமளவில் மண் வளத்தை பாதுகாக்க இயலும், மேலும் விவசாய தொழிலாளர்களின் உடலுழைப்பை குறைக்கவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தவும் முடியும் என்பதால் ட்ரோன் தொழில்நுட்பம் அனைவருக்கும் கிட்டும்வகையில் திட்டமிடப்பட்டு மலிவு விலையில் உருவாக்கி வழங்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என கேட்டுள்ளார்.

**பங்குச் சந்தையில் முன்னெப்போதும் இல்லாத வீழ்ச்சி ஏன்?**

**கனிமொழி என்.வி.என்.சோமு:**



2024 பொதுத் தேர்தலுக்கு பிறகு பங்கு விலைகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில் வீழ்ச்சியடைந்து முதலீட்டாளர்களுக்கு பல லட்சம் கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுள்ளதை விசாரிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என திமுக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி என்.வி.என் சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

SBI, LIC மற்றும் பிற பொதுத்துறை வங்கிகள் போன்ற அரசு நிறுவனங்கள் பங்குச் சந்தையில் முதலீடு செய்திருக்கும் நிதிகளின் விவரங்கள் மற்றும் அதன் தற்போதைய நிலை என்ன? இந்த விவகாரத்தை செபி விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கை இருப்பது குறித்து அரசின் நடவடிக்கை என்ன என்றும் தனது அறிக்கையில் அவர் கேட்டுள்ளார்.

**பால்வள மேம்பாட்டிற்கான தேசிய திட்டத்தின் (NPDD) நிலை என்ன?**

**சி.என். அண்ணாதுரை:**



பால்பண்ணை உள்கட்டமைப்பு மற்றும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட பால்வள மேம்பாட்டுக்கான தேசிய திட்டத்தின் (NPDD) நோக்கங்கள் பற்றிய விவரங்களை வெளியிடுமாறு திமுக எம்.பி. சி.என். அண்ணாதுரை மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் மேலும் கேட்டிருப்பதாவது:

1. இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து பால் உற்பத்தி, அதன் தரம் மற்றும் விவசாயிகளின் வருமானத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தால் அதன் தரவுகளை வெளியிடுக.

2. மாநில வாரியாக செய்துமுடிக்கப்பட்ட மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு குறித்த விவரங்களை வெளியிட வேண்டும்.

3. பால் சேகரிப்பு மையங்கள், குளிரூட்டும் ஆலைகள் மற்றும் பதப்படுத்தும் வசதிகள் போன்ற உள் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதில் NPDDஇன் பங்களிப்பு இருந்தால், அதுகுறித்த விவரங்கள் வெளியிட வேண்டும்.

**சுய உதவிக்குழு திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடி!**

**அருண் நேரு:**



பெண்கள் அதிகளவில் பங்குபெறும், பயன்பெறும் சுய உதவிக்குழுக்களை மேம்படுத்தி வளர்ப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது என்கிற செய்தி குறித்து மேலதிக தகவல்கள் வெளியிடுமாறு மக்களவையில் திமுக எம்.பி. அருண் நேரு கேட்டுள்ளார். சுய உதவிக் குழுக்களுக்கு ஈ-மார்க்கெட் தளத்தில் தனி இடம் ஒதுக்கி அவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் திட்டங்களை ஒன்றிய அரசு உருவாக்கிடவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**CSR நிதியின்கீழ் பெறப்பட்ட நன்கொடை விவரங்களை வெளியிடுக!**

**பி.வில்சன்:**



கடந்த ஐந்தாண்டுகளில் ஒதுக்கப்பட்ட CSR நிதியின் விவரங்கள் மற்றும் நன்கொடை அளிக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்களை மாநில வாரியாக வெளியிட வேண்டும் என மாநிலங்களவையில் திமுக எம்.பி. பி. வில்சன் கோரிக்கை வைத்துள்ளார்.

2014 முதலான கடந்த பத்தாண்டுகளில் CSR நிதியின் கீழ் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் விவரங்கள் மற்றும் அவை முறையாக செயல்படுகிறதா என்பதை கண்காணிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் மற்றும் கடந்த ஐந்தாண்டுகளில் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் (என்எல்சி) நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட, செலவு செய்யப்பட்ட தொகையின் விவரங்களை வெளியிட வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

**PMGSY திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் சாலைவசதிகளின் நிலை என்ன?**

**மலையரசன்:**



பிரதான் மந்திரி கம் சடக் யோஜனாவின்(PMGSY) தற்போதைய நிலை என்ன என்று திமுக எம்.பி. மலையரசன் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது :

கள்ளக்குறிச்சி தொகுதியில் இது வரை தரம் உயர்த்தப்பட்ட, புதிதாக அமைக்கப்பட்ட சாலைகளின் விவரங்கள் என்ன?

கடந்த நிதியாண்டில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதித் தொகை எவ்வளவு?

திட்டத்தில் குறிப்பிட்ட நேரத்திற்குள் சாலை வசதிகள் அமைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும்?

இத்திட்டத்தை கிராமப்புற பகுதிகளில் செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் என்னென்ன?

எதிர்காலத்தில் மேலும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் இருக்கும் திட்டங்கள் என்ன?

**மருந்துகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்திடுக!**

**கே.ஆர்.என். ராஜேஷ்குமார்:**



நாட்டில் மருந்து நிறுவனங்கள் குறிப்பிடப்பட்ட தரத்தையும் பாதுகாப்பையும் பூர்த்தி செய்கின்றனவா என்பதை உறுதிசெய்ய அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களவையில் திமுக எம்.பி. கே.ஆர்.என். ராஜேஷ்குமார் கேள்வி எழுப்பினார். மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தை மறுஆய்வு செய்து மருந்துகளுக்கான தரக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் மத்திய மருந்துகள் தரநிலை கட்டுப்பாட்டு அமைப்பு(CDSCO) தரக் கட்டுப்பாட்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை வெளியிடுமாறும் அவர் கேட்டுள்ளார்.

---

### கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியம்!

## ஒன்றிய அரசினரால் உரிய திட்டங்களுக்காக நிர்வகிக்கப்படுகிறதா?

### மக்களவையில் - டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச.6–

அரக்கோணம், கழக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் 02.12.2024 அன்று மக்களவையில், கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியம், ஒன்றிய அரசின் திட்டங்களுக்காக உரிய முறையில் செலவழிக்கப்படுகிறதா என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா என்றும் ஒன்றிய அரசின் கூட்டாண்மை விவகாரங்கள் துறை இணையமைச்சர் ஹர்ஷ் மல்ஹோரித்ராவிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் கூட்டாண்மை விவகாரங்கள் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு : –



பிரிவு 135, கம்பெனிகள் சட்டம் 2013ன் படி, ஐந்து கோடிக்கும் மேல் இலாபம் ஈட்டும் கூட்டாண்மை நிறுவனங்கள், இலாபத்திலிருந்து குறைந்த பட்சம் இரண்டு சதவீதம் அளவிற்காவது, கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியமாக, நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகவும், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பாதுகாப்பதற்காகவும், சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்காகவும் கட்டாயமாக செலவழிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசு திட்டம் தீட்டியுள்ளது.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது, காட்டு வளங்களைப் பாதுகாப்பது. கால்நடைகள் நலத் திட்டங்கள், ஆறுகளை சுத்தப்படுத் துவது போன்ற திட்டங்களுக்காக கூட்டாண்மை நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் செலவிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும், ஒன்றிய அரசு, மாநில அரசுகளால் நிர்வகிக்கப்படும் ஆராய்ச்சித் திட்டங்களையும் பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் ஆராய்ச்சிகளுக்காகவும், மேலும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி குழுமம், அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி குழுமம் ஆகிய அமைப்புகளால் நிறைவேற்றப்படும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க திட்டங்களுக்காகவும் கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியம் செலவிடப்படுவதை ஒன்றிய அரசு கட்டாயமாக்கியுள்ளது என்றும், இதற்காக, ஒவ்வொரு நிறுவனத்திலும் கூட்டாண்மை சமூக நிதி பொறுப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அந்த குழுக்கள், இந்த பொறுப்பை திறம்பட நிர்வகித்து வருகின்றன.

இவ்வாறு இணையமைச்சர் ஹர்ஷ் மல்ஹோர்தரா அவர்கள் பதிலை அளித்துள்ளளார்.



பெஞ்சல் புயல் காரணமாக திருவண்ணாமலை, மண் சரிவில் சிக்கிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேரின் உடலுக்கு, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அஞ்சலி செலுத்தினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மாநில மருத்துவரணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், நகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் அ.திவாகர், அருணை வெங்கட், எஸ்.பரசுராமன் ஆகியோர் உடன் இருந்தனர்.

---

## பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கிடுக!

### மாநிலங்களவையில் நேரமில்லா நேரத்தில் கழக உறுப்பினர் மு.சண்முகம் எம்.பி. வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 6 –

மாநிலங்களவையில் 4.12.2024 அன்று கழக உறுப்பினர் மு.சண்முகம் நேரமில்லாநேரத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினை சம்பந்தமாக உரையாற்றினார்.

அப்போது அவர், வாழ்வாதாரம் இழந்து பஞ்சாலைத் தொழிலாளர்கள் வறுமையில் வாடுகிறார்கள். எனவே அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென வலியுறுத்திப் பேசினார்.

அவர் மாநிலங்களவையில் ஆற்றிய உரை வருமாறு :–

இந்தியாவில் விவசாயத்திற்கு அடுத்ததாக வேலைதரும் இடம் என்பது ஜவுளித் தொழில் ஆகும். ஆயிரக்கணக்கான பஞ்சாலைகள் 1970 மற்றும் 1980களில் இருந்து வந்தது. எனவே, மும்பையை



இந்தியாவின் மான்செஸ்டர் என்றும் கோயம்புத்தூரை தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைத்து வந்தனர்.

தவறான பஞ்சாலை கொள்கையினால் மிகுதியான ஆலைகள் மூடப்பட்டன. மூடப்பட்ட ஆலைகளில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பஞ்சாலைத் தொழிலாளர் மறுவாழ்வு நிதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை செப்டம்பர் 1986–ல் கொண்டுவரப்பட்டது. அதன் பிறகு அந்த நிதிகள் அனைத்தும் ராஜீவ் காந்தி தொழிலாளர் நலத்திட்டத்தில் ஏப்ரல் 2017 முதல் சேர்க்கப்பட்டு வேலையிழந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று கூறியது.

அந்த திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ், வேலையிழந்த தொழிலாளர்கள் முதல் ஆண்டு 50 சதவிகிதம் அவர்கள்வாங்கிய ஊதியத்தில் பெறுவார்கள். இரண்டாம் ஆண்டு 25 சதவிகிதம் அவர்கள்வாங்கிய ஊதியத்தில் பெறுவார்கள்.

ஆனால், பல ஆண்டுகளாக தேசிய பஞ்சாலைகள் நிரந்தரமாக மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையிழந்து, வாழ்விழந்து இருக்கும் சூழலில் அவர்களுக்கு, அந்த வயதானகாலத்தில் எந்தவொரு பலனும் இந்தத் திட்டத்தின் கீழ் கிடைக்கவில்லை. ஆனால், எதிர்பாராதவிதமாக வேலையிழந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய இத்திட்டத்தின் பலன்களைபெற சில காரணங்கள் கூறி மறுத்து வருகின்றனர்.

எனவே இந்த ஒன்றிய அரசை குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சரை கேட்டுக் கொள்வது, அவர்களுடையஆளுமையின் கீழ் உள்ள இ.எஸ்.ஐ.சி. திட்டத்தின் மூலம் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இந்த நிவாரணங்கள் கிடைக்க ஆவன செய்திடவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. பேசினார்.



பெஞ்ஜல் புயல் மற்றும் தென்பெண்ணையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காரணத்தினால் கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிங்கிரிகுடி, மேல்அழிஞ்சிபட்டு, திருப்பணாம்பாக்கம், அழகியநத்தம், கிளிஞ்சிக்குப்பம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் மற்றும் கடலூர் மாநகராட்சி குறிஞ்சி நகர், தட்சிணாமூர்த்தி நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அய்யப்பன் எம்.எல்.ஏ ஏற்பாட்டின் பேரில் ரெட்டிச்சாவடியில் தனியார் மண்டபத்தில் உணவு சமைக்கப்பட்டது. இந்த நிலையில் ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதியிலுள்ள நகர்களை சேர்ந்த 12000 பேருக்கு உணவு அனுப்பும் பணியை வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார். ஊரக வளர்ச்சி துறை செயலாளர் ககன்தீப்சிங் பேடி, ஆட்சியர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார், அய்யப்பன் எம்.எல்.ஏ. ஆகியோர் தனியார் மண்டபத்தில் தங்கி இருந்த பொதுமக்களுக்கு உணவு வழங்கினார்கள். இதில் கூட்டுறவு சங்க தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சுதாகர், ஜெயமூர்த்தி, வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர் அழகு, நிர்வாகிகள் ராம்குமார், வசந்த், பிரகாஷ், பரத் ரெட்டியார், ரவிராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.